**இம்புல்பே பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 20 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இம்புல்பே பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்புப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 1,496,974 தொகையான இறுதியிருப்பு ரூபா 1,696,134 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நூலகப் புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்ட ரூபா 11,006 தொகை செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டமையினால் நூலகப் புத்தகங்கள் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் இரண்டு நூலகங்களுக்காக நன்கொடையாகக் கிடைத்த ரூபா 87,222 பெறுமதியான 194 புத்தகங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் கிடைத்த வீடமைப்புக் கடன் வட்டிகளின் அரசாங்கப் பங்களிப்பான ரூபா 89,067 தொகை ஆண்டின் வருமானச் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் கடன், தனிப்பட்ட கடன் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 5,337,814 ஆக இருந்ததுடன் அது ஊழியர் கடன் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் ரூபா 5,273,811 ஆகக் காணப்பட்டது.

(ஆ) நானாவித வைப்புப் பதிவேட்டில் தனிப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,377,199 ஆக இருந்ததுடன் அதற்குரிய நானாவித கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 10,307,686 ஆனமையால் வேறுபாடு ரூபா 8,930,487 ஆகும்.

(இ) முற்பணப் பதிவேட்டின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,510,231 இற்குரிய முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 7,367,625 ஆனமையால் வேறுபாடு ரூபா 2,857,394 ஆகும்.

(ஈ) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள கடன்கொடுத்தோர் பதிவேட்டின் மீதிகளின் கூட்டுத்தொகைக்குமிடையே ரூபா 11,439,691 தொகையான வேறுபாடு திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டிருந்தது.

**1.3.3 பெறவேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் நிலுவை நீர்க்கட்டணம் ரூபா 3,652,412 தொகையில் ரூபா 3,177,100 தொகை 2018 ஏப்ரல் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல வருட காலமாக கொண்டுவரப்படுகின்ற ரூபா 370,250 கூட்டுத்தொகையான நிலுவை கழிவுப் பொருள் கட்டணம் 2018 ஏப்ரல் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்களையும் நடைமுறைச் சொத்துக்களையும் உறுதிப்படுத்துவதற்கான நிலையான சொத்துப் பதிவேடு, விரிவான பட்டோலை, காலப்பகுப்பாய்வு அறிக்கை மற்றும் கடன்பட்டோர் பதிவேடு என்பன சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 155,425,448 கூட்டுத்தொகையான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) கிடைக்க வேண்டிய மற்றும் முன்கொண்டுவரப்பட்ட 04 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 4,222,295 கூட்டுத்தொகைக்காக நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் நாட்குறிப்புப் பதிவுகள் என்பன சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.3.5 இணங்காமைகள்**

**1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் | | | |
| | (i) | 24 ஆவது பிரிவின் 1(அ) மற்றும் (ஆ) உபபிரிவுகள் | - | சபைக்குச் சொந்தமான வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கோ அல்லது இது தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கோ 2003 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (ii) | 126 (vii)(ஊ) | - | சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற அறிவித்தல் பதாதைகள் தொடர்பாக உப விதிகளை விதித்து கட்டணம் அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) | 134 ஆம் பிரிவு | - | சபையின் அபிவிருத்தியடைந்த கிராமப் பிரதேசமாக 2015 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டிருந்த 06 கிராமப் பிரதேசங்களில் ஆதனவரி அறவிடுவதற்கு 2018 ஏப்ரல் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி | | | |
| | (i) | விதி 14(1) | 12,379,000 | 2017 ஆம் ஆண்டின் பாதீட்டில் உள்ளடக்கப்படாத பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட ரூபா 12,379,000 தொகையான 11 செயற்திட்டங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | விதி 143 | 10,307,686 | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ஒவ்வொரு வகுப்பினதும் வைப்புக்களுக்குரிய பேரேடுகள் மாதாந்தம் சமப்படுத்தப்பட்டு அந்த மீதிகளின் கூட்டுத்தொகை பிரதான பேரேட்டுக் கணக்கின் மீதியுடன் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | (iii) விதி 165 | - | பிரதான பேரேட்டில் வருமானம், செலவினம், முற்பணம், வைப்புக்கள், கடன் மற்றும் சொத்துக் கணக்குகள் மாதாந்தம் நாளதுவரையாக்கப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | 2016 இன் 03 ஆம் இலக்க ஊழியர்களின் தேசிய ஆகக்குறைந்த வேதன அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு | - | ஏதாவதொரு தொழிலில் அல்லது சேவையில் ஈடுபட்டிருக்கும் சகல ஊழியர்களுக்காகவும் தேசிய ஆகக்குறைந்த மாதாந்தம் சம்பளம் ஆகக்குறைந்தது பத்தாயிரமாக இருக்க வேண்டிய போதிலும், சபையின் மூலம் நிர்வகிக்கப்படுகின்ற ஹிட்டுவல முன்பள்ளி பாடசாலையின் ஆசிரியைக்காக மாதாந்தம் ரூபா 2,500 படியொன்று 2012 ஆம் ஆண்டு முதல் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2000 இன் 53 ஆம் இலக்க மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் | - | 2016 பெப்ரவரியில் ஆரம்பிக்கப்பட்ட றை-கெபோக்வத்த கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்திற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு 2018 ஏப்ரல் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| | (i) நிதிப்பிரமாணம் 71 | - | 1986 ஆம் ஆண்டு முதல் சபையினால் நிர்வகிக்கப்படுகின்ற 02 முன்பள்ளிப் பாடசாலைகளுக்காக 02 முன்பள்ளி பாடசாலை ஆசிரியர் பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கு 2018 ஏப்ரல் வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 371(5) | 4,510,231 | முற்பணப் பதிவேட்டின் பிரகாரம் 2002 ஆம் ஆண்டு முதல் 2017 திசெம்பர் வரை விநியோகிக்கப்பட்ட ரூபா 4,510,231 கூட்டுத்தொகையான 110 முற்பணங்கள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 571 | 959,348 | 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை பொது வைப்புக் கணக்கில் காணப்பட்ட ரூபா 959,348 தொகையான உரித்துக் கோரப்படாத காலாவதியான வைப்புக்களை ஓய்வு பெறச்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2012 சனவரி 05 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1 மற்றும் 3.2 ஆம் பந்திகள் | 9,796,407 | ஒப்பந்தகாரர் ஒருவரைத் தெரிவு செய்யும் போது பின்பற்றப்பட வேண்டிய தேவைகள் பின்பற்றப்படாமல் மதிப்பீட்டு வேலை பெறுமதி 9,796,407 தொகையான 15 ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தது. |
| (எ) | 2015 யூலை 15 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2013 யூன் 05 ஆந் திகதிய PCMO/PR/2013 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் கடிதம் | - | செயற்பாடற்ற நிலையில் காணப்படுகின்ற கெப் வண்டியை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஏ) | 1975 இன் உள்ளூராட்சி ஓய்வூதியக் கட்டளையின் 36 ஆம் பந்தி | 156,440 | 1993 செப்தெம்பர் 03 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்றுச் சென்ற உள்ளூராட்சி சேவையின் ஓய்வூதிய உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துவதற்காக சபையினால் ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 156,440 கூட்டுத்தொகையானது 2018 ஏப்ரல் வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | 2016 ஒக்தோபர் 19 ஆந் திகதிய ACLG 01/15 ஆம் இலக்க உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் கடிதம் | - | 2011 ஆம் ஆண்டின் ஆதன வரி மதிப்பீட்டை கொண்டு ஆதன வரி அறவிடப்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டை மீள்திருத்தம் செய்வதற்கு 2018 ஏப்ரல் வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,520,417 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,811,194 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 5,184,659 | 4,081,871 | 6,482,921 | 3,881,128 | 5,231,304 | 5,225,937 | 5,671,305 | 3,745,494 |
| வாடகை | 308,120 | 312,120 | 312,120 | - | 263,132 | 263,132 | 252,632 | 10,500 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 450,000 | 450,000 | 483,396 | - | 325,000 | 275,000 | 362,640 | - |
| ஏனைய வருமானம் | 1,030,000 | 819,390 | - | 1,309,715 | 9,434,715 | 648,197 | 1,223,438 | 490,325 |
| | 6,972,779 | 5,663,381 | 7,278,437 | 5,190,843 | 15,254,151 | 6,412,266 | 7,510,015 | 4,246,319 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் வீதவரி மற்றும் வரிகளின் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 1,144,066 இனால் குறைவடைந்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிலுவையாகக் காணப்பட்ட வீதவரியும் விரியுமான ரூபா 3,881,128 இனை அறவிடுவதற்கு 2018 ஏப்ரல் வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 ஏனைய வருமானம்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஏனைய வருமானங்களில் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 8,404,715 இனால் குறைவடைந்திருந்தது.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

சபரகமுவ மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2016 மே முதல் 2017 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரியதாக அறவிட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 206,195 மற்றும் 2015 சனவரி முதல் 2017 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் இனங்காணப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்களின் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவை மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், மக்களின் நலன் விவகாரம், வசதிகள் மற்றும்

நலன்புரிகள் போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) உபவிதி**

பிரதேச சபையினால் கட்டிடத் திட்டங்களை அங்கீகரித்தல், கழிவுப் பொருள் முகாமைத்துவம், இயந்திரங்களை வாடகைக்கு வழங்கல், நீர் வழங்கல் மற்றும் நீர் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் தியபஹச ஓய்வு விடுதியின் கட்டண நிர்ணயம் போன்றவற்றுக்குரிய உபவிதிகளை விதிப்பதற்கு 2018 ஏப்ரல் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ''பிளிசறு'' தேசிய கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் மானியத்தின் அடிப்படையில் ரூபா 8,864,327 தொகை செலவில் ''றை கெபொக்வத்த'' என்ற பெயருடைய இடத்தில் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் மீள்சுழற்சி செய்யக்கூடிய மற்றும் செய்ய முடியாத கழிவுப்பொருட்கள் அண்ணளவாக மெ.தொன் 610 வருடாந்தம் இந்த நிலையத்தின் நிலத்தில் முழுவதுமாக குவிக்கப்பட்டிருந்தது. அக்கழிவுப் பொருட்களை சுற்றாடலுக்கு பாதிப்பில்லாத வகையில் அகற்றுவதற்கான திட்டமுறையொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் மீள்சுழற்சி செய்ய முடியாத கழிவுப்பொருட்கள் நிலக்கீழ் நீரிலும் சுற்றாடலிலும் கலக்கின்றமையால் சுற்றாடல் பாதிப்புக்குள்ளாகும் அபாயம் காணப்பட்டது. அவ்வாறு வருடாந்தம் சேகரிக்கப்படுகின்ற மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்களில் 600 மெ.தொன்களை சேதனப் பசளை உற்பத்திக்காக பயன்படுத்துவதற்கான முறைமையொன்று 2018 ஏப்ரல் வரையிலும் தயாரிக்கப்படாமையினால் செயற்திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிவிக்காமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்ககை நிலை மற்றும் சுகாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 மனித வளமுகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மூன்றாம் சேவை மட்டத்தின் அரச முகாமைத்துவ உதவியாளர் அதிவிஷேட தரத்தின் செயலாளர் பதவி வெற்றிடமாக இருந்ததுடன் அரச முகாமைத்துவ தரம் I இன் உத்தியோகத்தரொருவர் ஆண்டின் மே முதல் செயலாளர் பதவியில் பதில் கடமை பார்ப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளரால் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஆ) வருமானப் பரிசோதகர், முகாமைத்துவ உதவியாளர், ஒரு ஆயுர்வேத மருந்து கலவையாளர், தொழிலாளர், நூலகரொருவர் மற்றும் வெளிக்கள தொழிலாளர் போன்ற பதவிகளில் காணப்படுகின்ற 10 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் உரிய பணிகள் மற்றும் நோக்கங்களை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு இடையூறாக இருந்தது.

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பம்பஹின்ன வாராந்த சந்தை 1977 ஆம் ஆண்டு முதல் பம்பஹின்ன நாற்சந்தி முதல் பம்பஹின்ன கும்பல்கம வீதியின் வீதி ஓரங்களில் நடாத்தப்படுவதனால் வியாபாரிகளும் மற்றும் நுகர்வோர்களும் மழையினாலும் வாகான நெரிசல்களினாலும் மிகவும் அசௌகரியங்களுக்கும் ஆபத்திற்கும் உள்ளாகியிருந்தனர். வாராந்த சந்தை அபிவிருத்திக்காக 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 4,561,397 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், சந்தையினை நடாத்துவதற்குப் பொருத்தமான பிரகாரம் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீதி பராமரிப்புத் திட்டத்தின் பிரகாரம் மாதம் ஒன்றிற்கு 01 கிலோமீற்றர் வீதி பராமரிப்பதற்காக திட்டம் தயாரிக்கப்பட்டமையின் காரணமாக நியாயமான காலப்பகுதியில் சபைக்குச் சொந்தமான 428 கிலோமீற்றர் வீதிகளை மேவுகை செய்யும் வகையில் பராமரிப்புத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது வீதிப் பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 100,000 நிதிஏற்பாடுகளில் ரூபா 76,840 தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) 2009 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட 07 காணிகள் தொடர்பாக காணி விற்பனைக்குரிய கூறிடல் திட்டம் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் விற்பனைக்குள்ள நிலப் பகுதிகளின் உள்ளபடியான விற்பனைப் பெறுமதி தொடர்பான மதிப்பீடொன்றைப் பெற்றுக் கொள்வதற்கும் விற்பனை செய்யப்பட்ட பெறுமதியில் 1 சதவீத வரித்தொகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பின்னவல சந்தை வளவில் கடையினை வாடகைக்கு வழங்குதல் தொடர்பாக பிரதான மதிப்பீட்டாளரின் 2017 பெப்ரவரி மதிப்பீட்டின் பிரகாரம் மாதாந்த வாடகை ரூபா 1,000 ஆக மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் 05 கடைகளிலிருந்தும் ரூபா 1,500 முதல் ரூபா 2,650 வரையிலான வாடகைப் பணம் அறவிடப்பட்டிருந்தது.

(உ) சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்குரிய பம்பஹின்ன நாற்சந்திக்கு அருகாமையிலுள்ள காணியில் 2014 ஆம் ஆண்டில் ரூபா 490,000 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பொது மலசலகூடம் சபையினால் வருமானமொன்றை உழைக்கும் வகையில் நடாத்திச் செல்வதற்குத் தேவையான வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2015 ஆம் ஆண்டு முதல் ரூபா 10 கட்டணம் அறவிடும் அடிப்படையில் கடையொன்றின் மூலம் இந்த மலசலகூடம் நடாத்திச் செல்லப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 3.4 சொத்து முகாமைத்துவம்

### விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

ரூபா 3,410,000 பெறுமதியான சபைக்குரிய கலிபவுசர் மற்றும் 03 இயந்திர உபகரணங்கள் 03 வருடம் முதல் 08 வருடம் வரையிலான காலப்பகுதி முதல் விளைவற்றுக் காணப்பட்டன.

### 3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபைக்குரிய சொந்தமான பெலிஹுல்ஓய ''திய பஹச'' ஓய்வு விடுதி வளவில் வாடகையாளரினால் சபையின் அனுமதியின்றி 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள் தொடர்பாக தலைவரின் ஆலோசனையின் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டின் போது மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு ரூபா 289,682 தொகை வாடகையாளருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. சபை நிதியத்திற்கு சட்டரீதியற்ற இந்தக் கொடுப்பனவால் ரூபா 72,000 தொகை வாடகையாளரினால் மீளச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் மிகுதி ரூபா 217,682 தொகையை அறவிடுவதற்கு 2018 ஏப்ரல் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெலிஹுல்ஓய ''திய பஹச'' ஓய்வு விடுதி 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 155,000 தொகைக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் வாடகையாளரினால் அது ரூபா 250,000 தொகைக்கு உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. வாடகையாளரினால் 2017 பெப்ரவரியில் ஓய்வு விடுதி மீள சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், உப வாடகைக்கு வழங்கியதால் உடன்படிக்கை மீறியமை தொடர்பாக வாடகையாளருக்கு எதிராக நடவடிக்கைகளை எடுப்பதற்கும் ஓய்வு விடுதியின் கடைகளை மீள வாடகைக்கு வழங்குவதற்கும் 2018 ஏப்ரல் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 பெறுகைகள்

#### 3.6.1 பெறுகைகள் திட்டம்

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4 ஆவது அத்தியாயத்தின் 4.2.1(அ) வழிகாட்டியின் பிரகாரம் சபையினால் பிரதான பெறுகைகள் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.6.2 ஒப்பந்த நிர்வாகம்

கெபொக்வத்த கழிவுப்பொருள் முகாமைத்துவ வளவில் உள்ள கொங்கிறீட் வீதி ஓரத்தில் 7.7 மீற்றர் நீளமும் 1.5 மீற்றர் அகலமும் உடைய பகுதி உடைந்து வீதியின் வெளியே தள்ளப்பட்டிருந்தபோதிலும், ரூபா 83,652 தொகையான நிறுத்தி வைத்தல் பணத்தைப் பயன்படுத்தி அதனை திருத்துவதற்கு 2018 ஏப்ரல் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 04 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் சபையின் மீண்டெழும் செலவினத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 43.91 மில்லியனாக இருந்ததுடன் அதன் உள்ளபடியான செலவினம் ரூபா 34.95 மில்லியனாக இருந்தமையால் நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 8.6 மில்லியன் அதாவது 20 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மூலதனச் செலவினத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 2.02 மில்லியனாக இருந்ததுடன் அதன் உள்ளபடியான செலவினம் ரூபா 1.34 மில்லியன் ஆனமையால் நிதிஏற்பாடுகளில் ரூபா 0.68 மில்லியன் அதாவது 34 சதவீதம் பண்முகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியமையினால் ரூபா 1,000,000 வருமானமொன்று மதிப்பீடு

செய்யப்பட்டிருந்த போதிலும் அதிலிருந்து ரூபா 803,275 தொகை அதாவது 80 சதவீதத்தை உழைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பாதீடு பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவைத் தாபிப்பதற்கு 2018 ஏப்ரல் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வவ்போது பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | | குறைபாடுகள |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரையாக்கப்படாமை |
| | | (ii) | வருமானம், செலவினம் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள் குறைவாகவும் அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டமை. |
| (ஆ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | செலவின நிதி ஏற்பாடுகளில் கவனத்திற் கொள்ளக்கூடிய சேமிப்பு காணப்பட்டமை |
| | | (ii) | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| | | (iii) | குறைநிரப்பு மதிப்பீடு தயாரிக்கப்படாமை |
| (இ) | வருமான நிர்வாகம் | | நிலுவை வருமானம் அறவிடப்படாமை |
| (ஈ) | வாகனக் கட்டுப்பாடு | | வாகனங்கள் விளைவற்றுக் காணப்பட்டமை |
| (உ) | மனித வள முகாமைத்தும்வம் | | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (ஊ) | கழிவுப் பொருள் முகாமைத்துவம் | (i) | முறையான பிரகாரம் கழிவுப் பொருட்கள் அகற்றப்படாமை |
| | | (ii) | கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தின் நோக்கம் நிறைவேற்றப்படாமை |
| (எ) | ஒப்பந்த நிர்வாகம் | (i) | திட்டத்தின் பிரகாரம் வேலை பூர்த்தி செய்யப்படாமை |
| | | (ii) | நிர்மாணங்கள் உரிய பிரகாரம் பராமரிக்கப்படாமை |